-15



# ஒரு மகளின் கதை

அன்புமணி

Divisional Secretary
Divisional Secretariat
Manmunai Pattu
Arayampathy.

# ஒரு மகளின் கதை

"அன்புமணி"

அன்பு வெளியீடு,
18, நல்லையா வீதி, மட்டக்களப்பு.

அன்பு வெளியீடு – 15

தலைப்பு: ஒரு மகளின் கதை

வகை: சிறுகதை

ஆசிரியர்: அன்புமணி

வெளியீடு: அன்பு வெளியீடு,
18 நல்லையா வீதி, மட்டக்களப்பு

மின்கணணி: க.சூரியகுமாரன்

அச்சகம்: எவகிறீன் அச்சகம்,
திருமலை வீதி, மட்டக்களப்பு

வெளியீட்டுத் திகதி : 25.10.2004

**Anpu Publication – 15**

Title: "Oru Mahalin Kathai"
(Story of a Daughter)
Categroy: Short Story
Author: Anpumani
(R.Nagalingam)
Publishor: Anpu Publications,
18, Nallaiah Road,
Batticaloa.
Computer: K.Sooriyakumaran
Printer: Evergreen Printers,
Trinco Road, Batticaloa.
Date of Publication: 25.10.2004

Divisional Secretariat,
Manmunai Pattu
Arayampathy.

25.06.2004ல் அமரத்துவம் அடைந்த
எங்கள் அன்புச் செல்வி

# திருநிறைச்செல்வி

நினைவாக



மலர்வு:
23.08.1975

உதிர்வு:
25.06.2004

ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ!

உலகம் அறிந்திடாத புதுமையம்மா நீ!

பார்வையிலே குமரியம்மா

பழக்கத்திலே குழந்தையம்மா

ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ!

# ஒரு குறிப்பு

இது ஒரு வித்தியாசமான கல்வெட்டு.
பஞ்சபுராணங்கள் இல்லாமல்,
உறவினர்களின் புலம்பல்கள் இல்லாமல்,
அமரத்துவம் அடைந்தவரைப் பற்றிய உணர்வுகளே
நினைவு மலராகிறது.

ஆயிரம் மலர்கள் அகிலமெங்கும் பூத்தாலும்,
நமது தோட்டத்தில் மலர்ந்து சிரிக்கின்ற
**ஒருமலர்**
நமக்கு முக்கியமாகிறது.

அதுபோலத்தான் எமது சோகமும்
உலகில்,
ஆயிரக்கணக்கில் மனிதர்கள்
அவலச்சாவு அடைகின்றனர்.
தீயில், வெள்ளத்தில், போரில்,
பூகம்பத்தில், விபத்தில், வி'ஷமத்தனத்தில்
அந்த ஒவ்வொரு உயிரும்
சம்பந்தப்பட்டவர்களுக்கு முக்கியமாகிறது.

அவ்வாறுதான்,
எங்கள் திருநிறைச்செல்வியின் அகாலமரணமும்
எங்களைப் பாதிக்கிறது.
அந்தப் பாதிப்புகள்,
மனஉணர்வுகள்
அமைதியடையவே இந்த எழுத்து.

- **அன்புமணி** -

# ஒரு மகளின் கதை

## 1

"உங்க மகள் நெருப்புப் பற்றி ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கா. போயப் பாருங்க"

ஆஸ்பத்திரியிலிருந்து வந்த ஒரு நபர் கூறிய செய்தி –

அதிர்ந்து, ஸ்தம்பித்து நிலைகுலைந்து, பதறி ஓடினேன்.

மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலை, அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளே விடவில்லை. மகன் அருட்செல்வன் கைவிரல்களில் தீக் காயங்களுடன் விபரம் சொன்னான்.

அம்மாவுடன் வாக்குவாதப்பட்டு, ஏச்சுப் பொறுக்க முடியாமல் அழுது புலம்பி, வெதும்பி நிற்க, தான் போய் சமாதானப்படுத்தி விட்டதாகவும், பின்னர் 5.15 மணியளவில் யாருக்கும் தெரியாமல் வீட்டின் மொட்டை மாடிக்குப் போய், மண்ணெண்ணையைத் தன்மேல் ஊற்றிப் பற்றவைத்ததாகவும் தெரிவித்தான்.

அவலக்குரல் கேட்டுத் தான் மேலே போய் தீயை அணைத்துவிட்டு, ஓட்டோவில் ஆரையம்பதி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்று, அங்கிருந்து அம்புலன்ஸ் வண்டியில் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அழைத்து வந்தாராம்.

அவசர சிகிச்சைப் பிரிவில் மருந்து கட்டி முடிந்ததும் உள்ளே போய்ப் பார்க்க அனுமதித்தார்கள்.

உடம்பை ஒரு துணியினால் மூடியிருந்தார்கள். முகம் வீங்கியிருந்தது. கண்களை விழித்துப் பார்த்தாள். அந்த விழிகளின் தெய்வீகப் பிரகாசம் அப்படியே இருந்தது. மனதில் ஒரு சிறு அமைதி. ஆனாலும் -

மகள்மேல் ஒரு துரும்பு பட்டாலும், பதறித் துடிக்கும் உள்ளம் அங்கலாய்த்தது. இத்தனை தீக்காயங்களின் எரிச்சல் இருந்தும் இத்தனை அமைதியாக இருக்கும் இந்த 28 வயதுக் குழந்தை உண்மையிலே ஒரு அபூர்வப்பிறவிதான்.

ஒரு முக்கல் இல்லை. ஒரு முனகல் இல்லை.

மனதுக்குள் வெதும்பினேன்.

"அவசரப்பட்டிட்டியேஅம்மா! அவசரப்பட்டடிட்டியே"

அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து மகள் 12ம் வாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். கனத்த இதயத்துடன் வீடு திரும்பினேன்.

இரவு 10 மணி –

தூக்கம் எப்படி வரும்?

கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோட, எண்ணங்கள் சங்கிலியாகத் தொடர, இதயம் சுக்கலாக வெடித்துச் சிதற, மனதை வேறு திசைகளில் திருப்ப பகீரத முயற்சி மேற்கொண்டாலும் அது மீண்டும் மீண்டும் மகள் மேலேயே வந்து நின்றது. அவளைப் பற்றிய எண்ணங்கள் முட்டி மோதிக் கொண்டு காட்டாற்று வெள்ளம் போல் குமுறின.

அவள் பெயர் திருநிறைச் செல்வி. ஏழு ஆண்மக்களுக்கு ஒரு பெண். செல்வி என்று செல்லமாக அழைப்போம். அவள் தான் எங்கள் செல்வம். அவள் பிறந்த பின் தான் எங்கள் வீட்டில் நிறைவு ஏற்பட்டது.

அவள் வரவுக்காக நாங்கள் எப்படித் தவம் கிடந்தோம் என்பதை வார்த்தைகளில் சொல்ல முடியாது.

எப்படி, பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் நரேந்திரனின் (சுவாமி விவேகானந்தர்) வரவுக்காக ஏங்கித் தவித்தாரோ அப்படி நாங்கள் தவித்தோம்.

மேல் உலகத்தில் இருந்து புறப்பட்டு விட்டாள். பயணம் தொடர்கிறது. இதோ வந்து விடுவாள், அடுத்த குழந்தையாக அவள் வந்து குதித்துவிடுவாள் என்று ஒவ்வொரு பிரசவத்தின் போதும் சொல்லிக் கொள்வோம்.

ஒவ்வொரு முறையும் எதிர்பார்த்து. ஆறாவது முறை, அவள் வந்து குதித்த போது எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி – உணர்ச்சிப் பெருக்கு – வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

பாரதி பாடிய அந்தப்பாடல் -

***சின்னஞ்சிறு கிளியே – கண்ணம்மா***
***செல்வக் களஞ்சியமே***
***என்னைக்கலி தீர்த்தே – உலகில்***
***ஏற்றம்புரிய வந்தாய்***

இதுவரை வெறும் இசைக்காகவே பாடிவந்த இப்பாடலில் ஒவ்வொரு வார்த்தையும் இப்போதுதான் எனக்கு முழுமையாகப் புரிந்தது. பாரதி அப்பாடலை எழுதிய போது அனுபவித்த அதே உணர்வுகளை இப்போது நான் அனுபவித்தேன்.

புராணக் கதைகளில் வர்ணிப்பது போல், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக செல்வி வளர்ந்தாள்.

பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்த வகையில் வரும் ஏழு பருவங்களும் எங்கள் அனுபவத்தில் புதுமை பெற்றன.

செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், தாலப் பருவம் என அவளது ஒவ்வொரு பருவமும் ஒவ்வொரு புது உலகமாக எங்கள் முன் விரிந்தது.

சினிமாப் பாட்டுக்கள்கூட அப்போது எங்களுக்கு உயர்ந்த கவிதையாக இனித்தன.

“மண்ணில் வந்த நிலவே – என்
மடியில் பூத்த மலரே!

ஒவ்வொரு பாடலும் ரேடியோவில் விழும்போது அந்தப் பாட்டைப் பாடியே அவளை நாங்கள் கொஞ்சுவோம்.

காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்பார்கள். அந்த வகையில் ஒவ்வொரு தாய்க்கும் அவள் குழந்தை பொன்குஞ்சுதான். ஆனால் இந்தக் ‘குஞ்சு’ அதற்கும் அப்பாற்பட்டு நின்றது.

அத்தனை அழகு; அத்தனை பிரகாசம்; அத்தனை தெய்வீகம். அவளைப் பார்த்தாலே இன்னதென்று சொல்ல முடியாத ஒரு அற்புத உணர்வு தோன்றும்.

அவள் சிரித்தால் புதுமை; மழலை பேசினால் புதுமை; குறுகுறு நடந்தால் புதுமை; அவளின் ஒவ்வொரு அசைவும் கவிதையாக எங்களைக் கவர்ந்தது. பிள்ளைச் செல்வம் பற்றி வள்ளுவன் பாடிய ஒவ்வொரு குறளும் அவளுக்குப் பொருந்தி வந்தது. பாரதி பாடிய கண்ணம்மாப் பாடல்கள் அத்தனையும் அவளுக்குப் பொருந்தி வந்தன.

உச்சிதனை முகர்ந்தால் – கருவம்
ஓங்கி வளருதடி
மெச்சிஉனை ஊரார் – புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி

கன்னத்தில் முத்தமிட்டால் – உளம்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ – மனது
உன்மத்த மாகுதடி

உன்கண்ணில் நீர் வழிந்தால் – என்நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி
என்கண்ணில் பாவையன்றோ – கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ!

இந்த உணர்வுகள் அன்றுமட்டுமல்ல; இன்றும் அப்படியே தான் இருக்கின்றன.

✫ ✫ ✫

பள்ளிப் பருவம் – அது செல்வியின் வாழ்வில் ஒரு திருப்பம். செல்வியின் அம்மா பார்வதி ஆரையம்பதி சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணி புரிந்தாள். அதனால் அப்பள்ளியிலேயே அவளைச் சேர்த்தோம்.

ஒவ்வொரு நாளும் செல்வி தாயுடன் கூடவே பள்ளிக்குச் சென்று தாயுடனே திரும்புவாள்.

இவர்கள் இருவரும் பள்ளிக்குச் செல்வதை தெருவின் இரு மருங்கிலும் நின்று வேடிக்கை பார்ப்பார்கள். குசலம் விசாரிப்பர் கள். ஏதாவது செல்லக்கதை பேசுவார்கள். தாயும் அழகு; மகளும்

அழகு. அதனால் அவர்கள் இருவருமே மக்களைக் கவர்ந்தார்கள்.

சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் 5ம் வகுப்பு வரை மட்டுமே வகுப்புக்கள் உள்ளன. ஆனாலும் ஆண்டுதோறும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும். அதில் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். ஒரு கலைமகள் விழாவில் நடைபெற்ற குழந்தைகள் நடன நிகழ்ச்சியில் செல்வியும் பங்குபற்றினாள். தன் அழகினால் சபையோரைக் கவர்ந்தாள்.

பாராட்டுப் பெற்ற அந்த நிகழ்ச்சியை வெளியிடத்திற்கு எடுத்துச் செல்ல அதிபர் முனைந்த போது, அம்மா அதற்கு இடம் கொடுக்கவில்லை. அதனால் அதிபருடன் சிறிது முரண்பாடு கூட ஏற்பட்டது.

ஐந்தாம் வகுப்பு பாஸ் செய்ததும் செல்வி மேல் வகுப்புகள் உள்ள ஆரைப்பற்றை இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் சேர்ந்தாள்.

✲ ✲ ✲

தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த நான் எழுந்து சுவர்க்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஐந்து. மனம் இருப்புக் கொள்ளவில்லை.

அதிகாலை ஏழு மணிக்கு முன் ஆஸ்பத்திரிக்கு சென்றால்தான் வெல்வியைப் பார்க்க முடியும். அதன் பின் வார்டுகள் சுறுசுறுப்பாகிவிடும். காவலாளிகள் பார்வையாளர்களை வெளியேற்றிவிடுவார்கள்.

வார்டுக்கு வந்தபோது செல்வி ஆறதலாகப் படுத்திருந்தாள். காலையில் குளிப்பாட்டி மருந்து கட்டிவிட்டார்கள். படுக்கை சுத்தமாக இருந்தது. இரவு முழுக்க அவரோடு நின்ற தீபா, செல்வி சுகமாகத் தூங்கினதாகக் கூறினார்.

அயர்ச்சியோடு கண்விழித்தாள் செல்வி. அதே தெய்வீகப் பிரகாசம். சிறிதளவு நம்பிக்கை பிறந்தது. படிப்படியாகக் குணமாகிவிடுமா? அந்த அளவுக்குக் கடவுள் கருணை காட்டுவாரா? கொஞ்சம்கூட முகத்தில் வேதனை பிரதிபலிக்காமல் முகமலர்ச்சி யோடு செல்வி பேசுகிறாள்.

'சேலைன்' போய்க் கொண்டிருக்கிறது. யூரின் (மூத்திரம்) ஒழுங்காகப் போயிருக்கிறது. அப்படியென்றால்...? உள்ளுறுப்புக் கள் ஒழுங்காக வேலை செய்கின்றனவா?

ஆனால் டொக்டர் வேறுவிதமாகச் சொல்கிறாரே.

"40% வீதத்துக்குக் குறைவான எரிவு என்றால் தான் ஒருவாறு தப்பிப் பிழைக்கலாம். இந்தப் பிள்ளைக்கு 70% வீதத்திற்கு மேல் எரிவு ஏற்பட்டிருக்கிறது. தப்புவது கடினம்."

டொக்டரின் வார்த்தைகள் அடிவயிற்றைக் கலக்குகின்றன. ஆனாலும் ஒரு நப்பாசை. இறைவன் ஏதாவது ஒரு அற்புதம் நிகழ்த்தி என் செல்வியைக் காப்பாற்றிவிடமாட்டாரா?

இறைவா! நீண்ட நாள் தவத்தினால் நீ எங்களுக்குப் போட்ட பிச்சை இது. நீ போட்ட பிச்சையை நீயே எடுத்துக் கொள்வாயா? கொஞ்சம் கருணை காட்ட மாட்டாயா?

"போங்க, போங்க!" என்ற குரல் கேட்டது.

அது இறைவன் குரல் அல்ல. ஆஸ்பத்திரிக் காவலாளி களின் குரல். அவர்கள் தங்கள் கடமையைத்தான் செய்கிறார்கள். ஆனால் நமக்கு அது எமகிங்கரர்களின் குரல்போல் படுகிறது.

காலையில் செல்வியுடன் நிற்க வேண்டிய தவமணி, விஜி ஆகிய இருவரும் வந்து, இரவு நின்ற இருவருக்கும் ஓய்வு அளிக்கிறார்கள். ஓட்டோவில் அவர்களைக் கூட்டி வந்த அத்தான் (ஆரையூர் இளவல்) இரவு நின்ற இருவரையும் கூட்டிச் செல்ல முனைகிறார்.

அதிகாலையிலே, எனக்கு முன் வந்துவிட்ட ரவி, புஷ்ப ராணி, மனோகரன், பாபு, ரமேஷ், தினேஷ் ஆகியோர் வெளியேறும் எண்ணம் இல்லாமல் செல்வியின் கட்டிலைச் சூழ்ந்து நிற்கின்றனர்.

"ஏய்! போங்க, போங்க" என்ற காவலாளிகளின் கர்ணகடூர மான குரல் இரண்டாம் முறையும் கேட்டதும், அரைமனதுடன் எல்லோரும் வெளியேறுகிறார்கள்.

என் உயிர் செல்வியுடன் நிற்க, உடல் மட்டும் நடைப்பிணம் போல் வெளியேறுகிறது.

கடந்த 28 வருடங்களில், செல்வி எங்களுடன் பழகிய ஒவ்வொரு நினைவும் முட்டிமோதிக் கொண்டு மேல் எழுகின்றன. வேண்டாம் அவைகளில் மனத்தை இழந்தால், கண்கள் குளமாகி விடும். வீடு போய்ச் சேரமுடியாது. மனதைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன்.

வீடு வந்து, யந்திரமாகக் காரியங்களை ஆற்றிக் கொண்டு பகல் 12 மணி எப்போது வரும் என்று கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டு, அலைமோதுகிறேன்.

இதே போன்று பல வருடங்களுக்கு முன் ஆஸ்த்மா நோய் காரணமாக செல்வியை இதே ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு மிகுந்த மனத்தவிப்புடன் வீடு சென்ற ஞாபகம் வருகிறது. ஆனால் அந்த நோய் இரவே குணமாகிவிட்டது. மறு நாளே செல்வியை வீட்டுக்குக்கூட்டி வந்தோம். அப்போது சொன்ன "Doctor you

have saved my daughter" என்ற வாசகங்களை இம்முறையும் சொல்ல வாய்ப்பு ஏற்படுமா?

ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் க.பொ.த (சா த)பரீட்சை பாஸ் செய்ததும், செல்வி மேற்கொண்டு படிப்பைத் தொடரவில்லை. வீட்டோடு அடங்கி விட்டாள்.

வீட்டை விட்டு எங்கும் வெளியே சென்றதில்லை. ஆடைகளுக்கோ, நகைகளுக்கோ அவள் ஆசைப்பட்டதில்லை. புதுவருடத்தில் கூடப் புதிய உடைகளைப் போட்டுக் கொண்டதில்லை. அம்மா ஆசையுடன் வாங்கிக் கொடுத்த தோடுகளைக்கூடக் காதுகளில் போட்டுக் கொள்ளாமல், பெட்டியிலேயே வைத்திருந்தாள்.

இந்த விசித்திரமான போக்கு அவளுக்கு எப்படி ஏற்பட்டதெனறே புரியவில்லை. செல்வி 5ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்துக்குக் குடும்பத்துடன் சென்றிருந்தோம். காலை முதல் மதியம்வரை ஆலயத்திலேயே கழித்துப் பொங்கிப் படைத்துப் பூரிப்படைந்த நிகழ்ச்சி அது ஆனால் அதன் பின் அந்த ஆசைகூட அவளுக்கு ஏற்பட்டதில்லை.

1989ம் ஆண்டு முதல் 1991 வரை மட்டக்களப்பு கச்சேரியில் உதவி அரசாங்க அதிபராக நான் கடமை ஆற்றிய காலத்தில், அரசவாகனத்தில் நான் பயணம் செய்வது வழக்கம் அப்போதெல்லாம் செல்வி அந்த வாகனங்களுக்குக் கிட்டேயும் வரமாட்டாள் அந்த வாகனத்தில் பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசை அவளுக்கு ஏற்பட்டதில்லை. இவ்வாறு ஆசைகளற்ற பிறவியாக செல்வி வாழ்ந்தாள்.

இப்போது எண்ணிப்பார்த்தால் அது ஒரு மகத்தான விடயமாக என் மனதுக்குப்படுகின்றது. 6.3.1995ம் தேதியுடன் நான் 60 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்று,

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு வந்துவிட்டேன். ஆனாலும் பல்வேறு வேலைகள் காரணமாக அடிக்கடி மட்டக்களப்புக்கு சென்று வருவதுண்டு.

"அன்பு வெளியீடு" என்ற பெயருடன் இவ்வேலைகளை மேற்கொண்டிருந்தேன். 18 நல்லையா வீதி, மட்டக்களப்பு என்ற முகவரியில் இவ் வேலைகள் நடைபெற்றன. இக்காலத்தில் செல்வி வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தாள். சமைப்பது, புத்தகம் படிப்பது, தோட்ட வேலை செய்வது என்ற அளவில் அவள் உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. எப்போதாவது கடைக்குப் போய் சாமான் வாங்கி வருவது அயல் வீட்டவர்களிடம் எப்போதாவது பூக்கன்றுகளை வாங்கி வருவது- இவற்றைத்தவிர எவ்வித பொழுது போக்கும் அவளுக்கு இல்லை.

வீட்டுக்கு வரும், ஆனந்த விகடன், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் முதலிய சஞ்சிகைகளைப் படிப்பதும் அவள் பொழுது போக்குகளில் ஒன்றாக இருந்தது. வெளிநாட்டில் வதியும் எனது மூத்த மகன் அன்புச் செல்வன் அடிக்கடி டெலிபோன் செய்து செல்வியின் திருமண விஷயம் பற்றிக் கேட்பார். ஆனாலும் அந்த விடயம் எப்போதும் தடைப்பட்டுக் கொண்டே வந்தது.

இந்த வருடம் (2004) அவளது திருமண விடயத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் வீட்டில் உள்ள அனைவரும் செயற்பட்டோம்.

ஆனால் செல்வி இவ்விடயத்தில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை.தானுண்டு தன்பாடு உண்டு என்ற ரீதியில் அவள் நாளாந்த வாழ்க்கை அமைந்தது.

இடையில் இப்படி ஒரு துர்ச்சம்பவம் ஏற்பட்டது ஏன்? இது எனக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

# 2

கடிகாரத்தைப் பார்த்தேன், மணி பன்னிரெண்டு அவசர அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டேன் ஆஸ்பத்தியில் செல்வியின் கட்டிலைச் சூழ்ந்து கொண்டு ஒரு கும்பல் - தெரிந்த முகம், தெரியாத முகம் - தலைக்குத்தலை பொறுப்பற்ற அபிப்பிராயங்களைச் சொல்லிக் கொண்டு சிலர். செல்வி படுத்த படுக்கையிலிருந்தாலும், வந்தவர்களிடம் மெதுவாக ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். என்னிடமும் சில வார்த்தைகள் பேசினாள்.

அருள், ரவி, பாபு, பரமானந்தம், அத்தான், தவமணி, விஜி, சிவம், ரமேஷ், தினேஷ் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

கொழும்புக்குக் கொண்டு போகலாம்;
கண்டிக்கு கொண்டு போகலாம்;
எனச் சில ஆலோசனைகள்.

ஆனால் டொக்கடர் சொன்னதை நான் நினைவூட்டினேன் எரிகாயங்களுக்கு எங்கு சென்றாலும் இதே சிகிச்சைதான் பயணத்தால் உடல் மேலும் பாதிப்படையுமேயன்றி தேறாது.

கடலில் மூழ்கும் ஒரு கப்பலை அதன் கப்டன் வெளியே நின்று பார்த்துக் கொண்டிருக்கும் கையறு நிலையில் நான்.

ஆஸ்பத்திரியில் இன்று இரண்டாம் நாள்

செல்வியின் உடல் நிலையில் கொஞ்சம் முன்னேற்றம் ஆனால் அது தற்காலிகமானது என்றே டொக்டர் சொல்கிறார்.

மனத்தால் கூட ஒருத்தருக்குத் தீங்கு நினைக்காத செல்வி அவளுக்கு ஏன் இந்த நிலை ஏற்பட வேண்டும்?

கர்மவினை பற்றிப் படித்தெல்லாம் இப்போது கைகொடுக்க வில்லை. சஞ்சித கர்மா,பிராப்த கர்மா எல்லாம் பேசவும் படிக்கவும் தான் போலும் அனுபவத்தில் துன்பத்தைச் சந்திக்கும் போது, அவையெல்லாம் நினைவுக்கு வருவதில்லை. எவ்வாறாயினும் ஒரு தந்தைக்கு ஏற்படக்கூடாத மிகப் பெரிய சோகம் இது. உயிருக் குயிரான மகள் கண்முன்னே உயிருக்காகப் போராடிக் கொண்டிருக் கும் போது ஒரு துரும்பளவு உதவியும் செய்ய முடியாத நிலையில் தந்தை - எப்படித் தாங்குவது இத் துன்பத்தை?

ரவியும், புஷ்பராணியும் பலவாறு ஆறுதல் கூறினார்கள் வெறும் வார்த்தைகளால் ஆறுதல் அடையக்கூடிய சோகமா இது.

மாலையானதும் மீண்டும் ஆஸ்பத்திரி – ஒரு சிறு இன்ப அதிர்ச்சி.

பிற்பகல் செல்வி எழுந்து உட்கார்ந்து தன்னுடன் நின்றவர் களிடம் பல விடயங்கள் பற்றியும் பேசினாளாம், ஒவ்வொன்றாகச் சொன்னார்கள்.

சுகமானதும் உங்கள் வீட்டுக்கெல்லாம் நான் வரவேணும், நிறையப் பேசவேணும் என்றாளாம்.

ஒவ்வொருவரிடமும் வீட்டில் உள்ள ஒவ்வொருவரைப் பற்றி யும் விசாரித்தாளாம்.

அத்தான் குடும்பம், ரவி குடும்பம், பரமானந்தம் குடும்பம், பாபு குடும்பம், ஆறுமுகம் குடும்பம், வடிவேல் குடும்பம், நல்லையா குடும்பம், செல்வநாயகம் குடும்பம், சின்னப்பிள்ளை குடும்பம்.

இவற்றையெல்லாம் நினைவில் வைத்திருந்து ஒவ்வொருவரைப் பற்றியும் விசாரிப்பதென்றால் செல்வி தன்மனதில் நிறைய ஆசைகளைத் தேக்கி வைத்திருக்கின்றாளா?

இவற்றையெல்லாம் நிறைவேற்றும் வாய்ப்பு கிடைக்குமா?

எக்ஸ்ரே ரூமுக்கு எடுத்துச் சென்று மருந்து கட்டியதால் செல்வியிடம் இந்த முன்னேற்றம் காணப்படுகின்றதென்று வாட்நோஸ் தெரிவத்தார்.

இரவு செல்வியுடன் தங்கவேண்டிய தீபா, சித்திரா இருவரும் வந்து சேர்ந்து விட்டனர். அத்தான் குடும்பத்தினர் அப்பொறுப்பை எடுத்துக் கொண்டனர். ஒவ்வொரு நாளும் மூன்று வேளை ஆரையம்பதியிலிருந்து இதற்காக வரவேண்டும்.

ரவி குடும்பமும் மாறி மாறி இப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இத்தகைய உதவிகள் இல்லாவிட்டால் செல்வி இன்னும் கஷ்டப்பட்டிருப்பாள். இறைவன் கருணை துணைநிற்கிறது.

மாலை 06.30 மணி காவலாளி சத்தம் போடவும் கும்பல் கலைகிறது.

“போயிட்டு வாறன்” மகள் என்று சொல்ல செல்வி தலையசைத்து விடை கொடுக்கிறாள்.

கால்கள் வீட்டை நோக்கி நடக்கும் போதே பாபு சொன்ன அந்த சம்பவம் மனத்தில் அலை மோதியது

அன்று ஜூன் மாதம் 19ம் தேதி பாபு வழக்கம் போல் எங்கள் வீட்டுக்குச் சென்றிருக்கின்றார். பேச்சு வாக்கில் செல்விக்கு சமூர்த்தி உத்தியோகம் எடுத்துக் கொடுப்போம். அப்போதுதான் அவள் வெளியுலகத்து அனுபவங்களைப் பெறமுடியும் என்று அருட்செல்வன் விளையாட்டாகக் கூறியிருக்கிறார்.

அப்பேச்சை சீரியஸாக எடுத்துக்கொண்ட செல்வி அதற்கான க.பொ.த (சா/த) சான்றிதழை அம்மாவிடம் கேட்டிருக்கின்றாள். அம்மா ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்திருக்கிறார்.

ஆனால் செல்வி அம்மாவை நச்சரிக்கத் தொடங்கியிருக்கின்றாள். மகள் வேலைக்குச் செல்வது அம்மாவுக்குப் பிடிக்காத ஒரு விடயம். அதனால் அவள் செல்வியின் நச்சரிப்பைப் பொருட படுத்தவில்லை.

இந்தப் புறக்கணிப்பை செல்வியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வழக்கம் போல் தாய்க்கும், மகளுக்கும் வாக்கு வாதம். வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடையவே அருடசெல்வன் இடையில் புகுந்து இருவரையும் சமாதானப்படுத்தியிருக்கின்றான். அத்துடன் அந்தப் பிரச்சினை முடிந்தது முடிந்திருக்க வேண்டும். ஆனால் முடியவில்லை.

செல்வியின் மனதில் நீறுபூத்த நெருப்பாக மறைந்திருந்த வெப்பிசாரம் எப்படியோ மீண்டும் தலை தூக்கியிருக்கிறது. எவருமே கற்பனை செய்து பார்க்க முடியாத வகையில் செல்வி தன்னை மாய்துக் கொள்ள எண்ணி விட்டாள். ஆனால் இது செல்வியின் இயல்புக்குப் பொருந்தாத ஒரு எண்ணம். அந்தக் கணத்தில் இந்த எண்ணம் அவள் உள்ளத்தில் எப்படிப்புகுந்தது? அதுதான் விதியா?

விதி வேறு வகையிலும் இங்கே விளையாடியிருக்கிறது.

நீண்ட காலமாக வீட்டில் முடுமை பிடித்திருந்தது எந்த ஒரு காரியமும் நிறைவேறாமல் தடைப்பட்டுக் கொண்டேயிருந்தது. எப்போதும் வீட்டிலே ஒரு உறக்கம் முன்பிருந்த செஞ்செழிப்பும் இல்லை; சிறப்பும் இல்லை.

இதையிட்டுச் சில சாஸ்திரிகளிடம் கேட்டபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொன்னார்கள். செய்வினை என்றார்கள், தெய்வகுற்றம் என்றார்கள் பிதுர்களின் கோபம் என்றார்கள். எதை நம்புவது, எதை விடுவது, என்ன பரிகாரம் தேடுவது, ஒரே குழப்பம்.

இப்படியிருக்கும் போது, நான் தங்கியிருந்த வீட்டுக்கு தற்செயலாக வந்த ஒரு சாஸ்திரி, எனக்கும் ஒரு சாஸ்திரம் சொன்னார். நிறைவேறாத நேர்த்திக்கடன் ஒன்று தான் இந்த முடுமை நிலைக்குக் காரணம். அதை நிறைவேற்றினால் இந்த மந்த நிலை நீங்கும் என்றார்.

என்ன அந்த நேர்த்திக்கடன்?

ஏதாவது ஒரு காளி கோயிலில் தீப்பாய வேண்டும். நான் யோசித்துப் பார்ர்தேன். எனது அறிவுக்கு எட்டிய வரை எந்த ஒரு நேர்த்திக்கடனும் நான் வைக்கவில்லை. அது என் வழக்கமும் இல்லை. ஆனாலும் ஏதாவது ஒரு கோயிலில் தீப்பாய்வதில் எவ்வித குறையும் எனக்கு ஏற்படப்போவதில்லை.

எனவே சாஸ்திரி சொன்னபடி நடப்பது எனத் தீர்மானித் தேன். இந்த சாஸ்திரியார் வெறும் சாஸ்திரியார் இல்லை. சக்தி வாலாயம் உள்ளவர். தொழில் ரீதியாக இல்லாமல் நட்பு ரீதியா கவே இப்படிச் சாஸ்திரங்களைச் சொல்கின்றார். அவர் சாஸ்திரம் சொன்ன எல்லோருக்குமே நற்பலன் விளைந்திருக்கின்றது.

எனவே எனக்கும் இதனால் நன்மை ஏற்படலாம். உடனே நான் முடிவெடுத்தேன். சொல்லி வைத்தாற்போல் 18ம் திகதி வெள்ளிக்கிழமை சக்திமிக்க மட்டக்களப்பு புன்னைச்சோலை காளி யம்மன் கோயிலில் தீமிதிப்பு வைபவம் நடைபெறவிருந்தது.

இதுவும் அன்னையின் அருள்தான் போலும்.

அமிர்தகழி புன்னைச்சோலை காளியம்மன் கோயிலில் தீப்பாய்வதென்றால் அது ஒரு பகீரத முயற்சி.

நாள் முழுக்க உபவாசம் இருந்து, பயபக்தியுடன் முழுகி மஞ்சள் குளித்து ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் முட்டி, மோதி நெருக்கியடித்து, வரிசையில் சென்று தீக்குழியில் நடக்க வேண்டும்.

துணையாட்டகளுடன் சென்றபடியால் நான் இதில் தேறிவிட் டேன். தீமித்த கால்களில் எரிவு இருந்தது. ஆனாலும் மனதில் ஒரு திருப்தி.

வீட்டின் முடுமை நிலை நீங்கி, சுபீட்சம் ஏற்படும் அல்லவா? அம்மன் அருளால்தான் இத்தகைய பேறு எனக்குச் சித்தித்தது போலும் என எண்ணினேன்.

நான் தீப்பாய்ந்த மறுநாள், ஜூன் 19ம் திகதி எனது அருமை மகள் செல்வி தீக்குளித்திருக்கிறாள். இது எப்படிப் பொருந்தும்? அம்மன் அருள், பக்தி, நேர்த்திக் கடன் நிறைவேற்றல், சாஸ்திரம் எல்லாம் என்ன ஆனது?

நான் தீப்பாய்ந்தபோது ஏதும் தவறு நடந்திருந்தால் தெய்வ குற்றம் ஏற்பட்டிருந்தால், எனக்கல்லவா தண்டனை கிடைத்திருக்க வேண்டும்?

என் ஒரே மகளுக்கு ஏன் தண்டனை கிடைத்தது? அல்லது காக்கை உட்காரப்பனம்பழம் விழுந்த கதைதான் இது என்றால், ஒன்றும் அறியாத அப்பாவியான என் செல்விக்கு இந்தச் சோதனை ஏற்பட்டது ஏன்?

மனம் குழம்பிய நிலையில், தெய்வங்களையே நிராகரித் தேன், நிந்தித்தேன்! காயத்திரி பக்தர்களும், சாயி பக்தர்களும் செல்வியின் மீட்சிக்காக தீவிரமான பிரார்த்தனைகளைச் செய்தனர்.

எனது குருவான காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளுடன் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது மனக் குறையை எடுத்துக் கூறினேன். அவரும் செல்விக்காகப் பிராத்தனை செய்தார்.

எல்லையற்ற பரம் பொருளாகிய இறைவனின் சித்தத்தை சிற்றறிவு படைத்த நம்மால் புரிந்து கொள்ள முடியாது.

செல்விக்கு இக்கதி ஏற்பட்டதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள் எனப் பலர் எனக்கு ஆறதல் கூறினர். அவை எதுவும் எனக்கு மனச் சமாதானத்தை அளிக்கவில்லை. நான்படித்த நூல்கள், நான் கேட்ட அறிவுரைகள், நான் மற்றவர்களுக்குச் சொன்ன அறிவுரைகள் எதுவும் எனக்கு மனச்சமாதானத்தை ஏற்படுத்தவில்லை.

எப்படிப் பார்த்தாலும் தெய்வக் குழந்தையான என் செல்விக்கு இப்படி ஒரு அவலம் ஏற்பட்டதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் ஆஸ்பத்திரிக்குச் சென்று செல்வியின் முகதரிசனத்தை பெறுவது ஒன்றே எனக்குச் சற்று ஆறதல் அளித்தது இன்னும் எத்தனை நாட்கள் இப்படி?

இன்னும் ஒரு விசித்திரம்

செல்வி தீக்காயங்களுடன் ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்ட பின் ஆரையம்பதியிலிருந்தும் மகிழடித்தீவில் இருந்தும் மேலும் இரு பெண்கள் இவ்வாறு தன்மேல் லாம்பெண்ணை ஊற்றிப் பற்றவைத்துக் கொண்டதாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களும் செல்வியின் கட்டிலுக்கு அடுத்தடுத்த கட்டிலில் கிடந்தார்கள்.

எனது இதே சோகம் அவர்களுக்கும் இருக்கத்தானே வேண்டும் திருமணமான அவர்களின் கணவன், குழந்தைகள் இந்த சோகத்தை எப்படித் தாங்கிக் கொள்வார்களோ என்ற எண்ணம் எனது சோகத்தை சற்றுத்தணித்தது.

மூன்றாம் நாள் காலை 6 மணிக்குச் சென்றபோது எல்லோரும் எனக்கு முன்னே வந்திருந்தார்கள். கட்டிலருகே நின்ற சித்ரா 'ஆனந்தமய பகவான்' என்ற சாயி கீதத்தை மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தார் செல்வி கண்மூடி நிம்மதியாக இப்பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இரவு முழுக்க இதே பாடலைப் பாடும்படி செல்வி கேட்டா. அதனால் சித்ரா பாடிக்கொண்டிருக்கிறா – என்றார் தீபா.

என்றுமிலாத மலர்ச்சியுடன் செல்வி காணப்பட்டாள். கண்களில் அதே தெய்வீகப் பிரகாசம். வந்திருந்தவர்களுடன் சிரித்துப் பேசினாள். எங்கள் எல்லோருக்கும் ஒரே பரவசம் இறைவா இப்படியே படிப்படியாக குணம் ஆகிவிடுமா?

செல்விக்கு சிகிச்சை அளித்த டொக்டர்கள் மிகுந்த கரிசனை எடுத்துக் கொண்டார்கள். ஒரு சிங்கள டொக்கடர் மணிக்கு ஒரு தடவை வந்து பார்த்தார். தாதிகள் அவ்வப்போது வந்து சேலைன் மாற்றி, இஞ்ஜெக்ஷன் போட்டுக் கவனித்துக் கொண்டார்கள்.

நம்பிக்கையும், அவநம்பிக்கையும் மாறி மாறி அலைக் கழித்தன. செல்வி சாயி பக்தை அல்ல. ஆனாலும் இன்று சாயி கீதத்தை விரும்பிக் கேட்கிறாள். Drowning man catches a straw " என்பது போலவா? அல்லது கடைத்தேற ஒரு வழி கிடைத்து விட்டதா?

அத்தான் குடும்பத்தினர் தீவிரசாயி பக்தர்கள். தினமும் பஜனை செய்வார்கள். அவர்கள் பூசை அறையில் அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. செல்வியை ஆஸ்பத்திரியில் சேர்த்த மறுநாள் சாயி பகவான், செல்வியின் கட்டிலுக்கு வந்து கட்டிலைச்சுற்றி விபூதியைத் தூவிச் செல்வதுபோல் கனவு கண்டதாக ஒரு முறை ராதா கூறினார். இவையெல்லாம் நொந்த மனதுக்கு ஒத்தடம் கொடுக்கும் பேச்சுக்கள்தான்.

எனது மருமக்கள் சிலர் வெளிநாடுகளில் வசித்தனர் மாறன் அடிகடி தொலைபேசி எடுத்து செல்வி குணமானதும் ஜெர்மனிக்கு அழைத்து மேலதிக சிகிச்சை அளிக்கலாம் எனக் கூறுவார். செழியன் இத்தாலியிலிருந்து தொலைபேசி எடுத்து நிலமையை விசாரிப்பார். மகன் அன்புச்செல்வன் தினமும் தொலைபேசி எடுத்து விசரிப்பான் இவைகளால் என்ன பயனும் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும் ஆனாலும் இப்பேச்சுக்கள் மனதுக்கு இதமாக இருந்தன. கூடவே செல்வி குணமாகி விடக்கூடும் என்ற நப்பாசையையும் ஏற்படுத்தின.

அன்பு மகளே செல்வி! கொஞ்சம் நிதானித்திருந்தால் விவேகமாக செயறபட்டிருந்தால், உனக்காக காத்திருக்கும் எத்தனையோ சந்தோஷங்களை அனுபவிக்க முடிந்திருக்குமே? அவசரப்பட்டிட்டியே அம்மா! அவசரப்பட்டிட்டியே!

அன்று ஆஸ்பத்திரிக்கு வந்து பார்த்த அனைவரும் செல்வி நன்றாக இருக்கின்றாள் என்றே கூறினர். ஆனால் இவையெல்லாம் வெறும் அபிப்பிராயங்கள் மட்டுமே என்பதை டொக்டர் பிலிப் பலமுறை கூறியுள்ளார். வைத்தியர்கள் கூற்றுக்கும் சாமானியர் அபிப்பிராயங்களுக்கும் வேறுபாடு உண்டு அல்லவா?

அன்று காலை, மதியம், மாலை மூன்று வேளையும் செல்வியைப் பார்த்துவிட்டு மிகுந்த திருப்தியுடன் வீடு திரும்பினோம்.

ஒவ்வொரு முறையும் வார்டை விட்டு வெளியேறும் போது செல்வி முகமலர்ச்சியுடன் விடை கொடுத்தாள். இந்த மாற்றம் எங்களுக்குப் புதிராக இருந்தது.

இத்தனை நாட்களிலும் செல்வி, தீப்புண்களால் ஏற்பட்ட வேதனையைக் காட்டிக் கொள்ளவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் உடம்பைச் சுத்தப்படுத்தி மருந்து கட்டி, கட்டில்துணிகளை மாற்றி ஒழுங்காக வைத்திருப்பார்கள். அதுவே செல்வியின் உலகம் ஆகிவிட்டது.

## 3

சிறுவயதில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வெளியே செல்வது என் வழக்கம். ஒரு முறை கல்லடி ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் இல்லத்துக்கு செல்வியையும் மற்றும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு சென்றேன்.

ஒவ்வொரு இடமாகப் பார்த்து வந்த பின், பிரார்த்தனை மண்டபத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தோம்.

மூலஸ்தானத்தில் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா ஆகியோரது படங்கள் தெய்வீக ஒளியுடன் காட்சியளித்தன.

மலர்களின் நறுமணம், ஊதுபத்திகளின் சுகந்தவாசம், அனைத்தும் ஒரு பக்திப் பரவசத்தை ஏற்படுத்தின. வழமையான

காட்சிதான். ஆனால் செல்வி அதில் மிகவும் லயித்துப்போய் உட்காந்திருப்பதை அவதானித்தேன்.

இந்தச் சின்ன வயதில் இப்படி ஒரு பக்திப் பரவசம் ஆச்சரியமானதே. அது குழந்தைப் பருவத்தில் வேடிக்கை பார்க்கும் (inqusitive) மனோபாவமாகவும் இருக்கலாம்.

ஆனாலும் சுவாமி ஜீவனானந்தா அதை வெகுவாக ரசித்தார்.

தன்னிடம் அழைத்துக் கொண்டு பல கேள்விகளைக் கேட்டார். "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்" சஞ்சிகையைப் பார்ப்பதனால், சுவாமியின் கேள்விகளுக்கு செல்வி திருப்தியான பதில்களைச் சொன்னாள்.

சுவாமிஜி அன்னை சாரதாவைப்பற்றி செல்வியிடம் பல விடயங்களை எடுத்துக் கூறினார். அன்னை சாரதாவைப் போல் வாழவிருப்பமா? என்று சுவாமிஜி கேட்டபோது, 'இல்லை' என்னும் பாவனையில் தலையசைத்தாள் செல்வி. ஆனால் பிற்காலத்தில் அன்னை சாரதாவைப் போலவே அவள் வாழ்ந்தாள்.

இல்லக் குழந்தைகளை எங்களிடம் காட்டி இவர்கள் எல்லாம் உங்களைப் போன்று அதிஷ்டம் பெற்றவர்கள் அல்ல. அதனால் நீங்கள் இவர்களுக்காக முடிந்த அளவு உதவ வேண்டும். உதவுவீர்களா? என்று சுவாமிஜி கேட்டார். 'ஆம் என்னும் பாவனையில் செல்வி தலையாட்டினாள். சுவாமிஜி அவளைத்தட்டிக் கொடுத்தார்.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுடன் நீண்ட காலத் தொடர்பு கொண்டு அவ்வப்போது மிஷனுக்கு முடிந்த அளவு உதவிகளைச் செய்வது என் வழக்கம். அதை மனதில் வைத்துக்கொண்டே சுவாமிஜி செல்வியிடம் இப்படிக்கேட்டார்.

ஏழைக்கிரங்கும் சுபாவம் செல்வியிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. அதனால் சுவாமிஜியின் கேள்விக்கு அவள் உடனே பதில் கொடுத்தாள் (பிற்காலத்தில் அப்படியே வாழவும் செய்தாள்)

சுவாமி ஜீவனானந்தா எங்களை அழைத்துக் கொண்டு இல்லத்தின் ஒவ்வொரு பகுதியையும் காட்டிக் கொண்டு வந்தார். மரக்கறித் தோட்டம், மாணவர் படிப்பறை, விடுதிகள் மாணவர் உணவருந்தும் மண்டபம்,முன்பக்கம் உள்ள மலர்த்தோட்டம் என ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு வரும் போது, மலர்த்தோட்டத்தில் செல்வி மிகவும் லயித்து நின்றான். மலர்களை ஒவ்வொன்றாக அணைத்து மகிழ்ந்தாள்.

அப்போது சுவாமிஜி "இந்த மலர்களுக்கு உணர்வு இருக்கிறது. ஏதாவது விழாக்கள் நடப்பதானால் இந்த மலர்ச் செடிகளிடம் வந்து நாளைக்கு விழா இருக்கிறது நிறையப்பூக்கள் வேண்டும் என்று சொன்னால் மறு நாள் மலர்ச்செடிகள் எல்லாம் நிறையப்பூக்களுடன் பூத்துக் குலங்கும்" என்று கூறிச்சிரித்தார்.

செல்வியின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. பிற்காலத்தில் பூசைக்கு மலர்கள் அதிகம் தேவைப்படும் போது செல்வி இதே உத்தியைக் கையாண்டாள். ஈற்றில் அவளே பூசைக்கு வந்த மலர் ஆகிவிட்டாள்.

ஒரு முறை கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்துக்குக் குடும்பத்துடன் சென்றிருந்தோம். காலையில் சென்று பூசை கண்டு தொடர்ந்து மதியம் வரை அங்கேயே தங்கினோம்.

என்மனைவி ஒரு முருகபக்தை. “மலையிலும் இருக்கிறான் முருகன், மனதிலும் இருக்கின்றான்” என்று அடிக்கடி பாடுவாள். எல்லோரும் அந்த ஆலய சூழலை மிகவும் ரசித்து மகிழ்ந்தோம். கடற்கரை சூழல் அருகில் தென்னந்தோட்டம். செல்வி ஏனையோருடன் சேர்ந்து கொண்டு அந்தப்பிரதேசம் முழுவதும சுற்றி வந்தாள். முருகன் ஆலயத்தின் முன் நின்று மிகவும் பரவசத்துடன் வணங்கினான்.

மதியப் பூசையின் பின்னரும் ஆலயத்தை விட்டு வெளியேற மனமில்லாமல் அங்கேயே சிறிது நேரம் தங்கினோம்.

சுவாமி ஓங்காரானந்தா வந்து எங்களுடன் உரையாடினார். ஆலயம் அமைக்க வேண்டும். என கனவில் ஒரு சாது வந்து கூறிய செய்தி, அதன் பின் தன்னந்தனியே இவ்வாலயத்தை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் உருவாக்கி இன்றைய நிலைக்குக் கொண்டு வந்த முயற்சிகள் பற்றி எல்லாம் விபரமாகக் கூறினார். அவற்றையெல்லாம் செல்வி மிகுந்த ஆர்வத்துடன் கேட்டாள. இந்த ஆலயத்தில் அவளுக்கு ஒரு லயிப்பு ஏற்பட்டது. அடிக்கடி பூசைக்கு கொடுக்க வேண்டும் எனக் கூறினாள்.

இந்த ஆலய வருடாந்த உற்சவத்தில் ஆரையம்பதி மக்களுக்கு ஒரு திருவிழா உண்டு. ஒவ்வொரு வருடமும் திருவிழாவுக்கான எமது கட்டணத் தொகையை வழங்குவோம். ஆனால் திருவிழாவுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. இரவு வெகு நேரம் கண்விழித்திருக்க வேண்டும் என்பதால் திருவிழாவுக்குச் செல்லும் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனாலும் செல்வியின் எண்ணம் திருவிழா அளவில் நிறைவேறியது.

செல்வியின் எதிர்காலம் பற்றி அவ்வப்போது சாஸ்திரிகளிடம் கேட்பது என் வழக்கம் எல்லோரும் செல்வியின் பிரகாசமான எதிர்காலம் பற்றிச் சிலாகித்துக் கூறுவார்கள்.செல்வி

பூப்படைந்தபோது எதிர்காலம் பற்றிக் கூறிய ஒரு சாஸ்திரியார் சற்று வித்தியாசமான ஒரு கதையைக் கூறினார்.

செல்விக்குத் தீயில் ஒரு தத்து இருக்கின்றது. அதைத் தவிர்ப்பதற்கு தனியாக ஒரு சிறு பந்தல தென்னோலையால் கட்டி அதனுள் செல்வியை உட்காரவைத்து பந்தலுக்கு நெருப்பு வைக்க வேண்டும். ஆனால் நெருப்பு உள்ளே தாவமுதல் அவளை வெளியே எடுத்து விட வேண்டும். என அவர் கூறினார்.

இது ஒன்றும் புதுமையல்ல நீரில் தத்துள்ள பிள்ளைகளை நீரில் அமிழ்த்தி எடுப்பது போல், தீயில் தத்து உள்ள பிள்ளைகளை இவ்வாறு தீக்குள் புகுத்தி வெளியே எடுப்பது பரவலாக எங்கும் காணப்படும் வழக்கம்தான்.

ஆனால் இக்கதையை வீட்டில் உள்ளவர்கள் அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. அதை ஒரு வகையில் ஏளனமாகவே கருதினர். செவ்வாய் கிழமையில் பூப்படையும் பெண்களுக்கு அப்படிச் செய்வது வழக்கமாம். ஆனால் வீட்டவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

செல்விக்கு நெருப்பில் தத்து இருந்ததோ இல்லையோ, அவள் இன்று தீக்குளித்து மரணத்தை எதிர்நோக்கிக் கொண டிருக்கின்றாள். இந்த நினைவுடன், டொக்டர்கள் கூறிய விடயங் களை எண்ணிப் பார்த்தேன்.

டொக்கடர் பிலிப் சொன்னதுபோல 4ம் நாளிலிருந்து செல்வியின் உடல் நிலை மோசமாகத் தொடங்கியது. ராதா, சின்னப்பிள்ளை, தீபா, சித்திரா, தவமணி, புஷ்பராணி, விஜி ஆகியோர் இரவும் பகலும் மாறி மாறி நின்று செல்வியின் தேவைகளை கவனித்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு நாளும் மூன்று வேளை ஆஸ்பத்திரிக்கு சென்று செல்வி அனுபவிக்கும் சித்திரவதையைப் பார்த்துவிட்டு வருவது மட்டுமே எங்களால் செய்யக்கூடியதாகவிருந்தது.

7ம் நாள் வெள்ளிக்கிழமை காலையிலிருந்தே செல்விக்கு மூச்சுத் திணறல் ஆரம்பமாகிவிட்டது. ஒரு தடவை நான் ஆஸ்த்மா விற்காக உபயோகிக்கும் – அஸ்தாலின் – இன்ஹேலரை தனக்கும் அடிக்கச்சொல்லி, அப்படியும் மூச்சுத்திணறல் நிற்காமல் சோர்ந்து போனாள்.

மத்தியானம் நிலமை மோசமாகிவிட்டது. உணர்வற்ற நிலையில் அமைதியற்றுப்படுக்கையில் தவித்தாள். எந்தக்கணமும் மூச்சு நின்று விடலாம். ஆனால் நிற்கவில்லை. மூச்சு இழுத்துக் கொண்டேயிருந்தது. பகல் ஒன்றரை மணிக்கு காவலாளர் வந்து சத்தம் போட அனைவரும் வெளியேறினோம்.

பிற்பகல் 3½ மணிக்கு அந்தத் தொலை பேசிச் செய்தி கிடைத்தது பதைபதைப்புடன் ஆஸ்பத்திரிக்கு சென்றேன், செல்வி அமைதியடைந்து விட்டாள். துணியால் அவள் முகத்தை மூடிவிட்டேன். உடலை வீட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான காரியங்கள் துரிதமாக நடைபெற்றன. திடீர் மரண விசாரணை அதிகாரி, திரு. பப்டிஸ்ட் பெர்ணாண்டோ இதில் எங்களுக்குப் பெரிதும் உதவினார்.

இரவு 10 மணிக்குச் செல்வியின் உடலை வீட்டுக்கு எடுத்துச் சென்றோம். விலை உயர்ந்த கூறைச்சேலையணிந்து விலையுயர்ந்த பிரேதப்பெட்டியில் அவள் படுத்திருந்தாள். எல்லாம் ரவியின் வேலை.

மணக்கோலத்தில் காணவேண்டிய அக்காட்சியை பிணக் கோலத்திலேயே காணமுடிந்தது.

எந்தக்கணத்திலும் உடைந்துவிடக்கூடாது என்ற மன வைராக்கியத்துடன் அந்த அமானுஷ்யமான சோகத்தை உள்ளடக் கிக் கொண்டேன். எண்ணங்கள் விரிந்தன. என்ன அற்புதமான தெய்வக்குழந்தை எங்கள் செல்வி ஆசாபாசங்கள் எதுவும் இல்லாமல் ஒரு துறவியைப்போல் வாழ்க்கை நடத்திய இந்தத் தெய்வக் குழந்தை வாழ்க்கையில் எதற்குமே ஆசைப்பட வில்லையே. மற்றப் பெண் குழந்தைகள் கண்ட எந்த சந்தோசத்தை யும் இவள் கண்டதில்லையே.

வழக்கமாக எமது ஊரில் பெண்குழந்தைகள் பூப்பு அடைந்ததும் பூப்பு நீராட்டு விழா என்று ஒரு கொண்டாட்டம் நடைபெறும். அதைக்கூட நாங்கள் செய்ய முடியவில்லை. உறவினர் வீடுகளில் எத்தனையோ பூப்பு நீராட்டு கொண்டாட்டங் களுக்குச் சென்ற எமக்கு, எமது ஒரே ஒரு மகளின் பூப்பு நீராட்டு விழாவைக் காணமுடியவில்லை.

தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு, தீபாவளி போன்ற விசேட தினங்களில், எல்லா வீடுகளிலும் பெண்கள் புத்தாடை அணிந்து வளைய வருவார்கள். அந்தச் சந்தோஷம் எதையும் நாங்கள் காணமுடியவில்லை.

வாங்கிய புதிய உடைகளையெல்லாம் பெட்டியில் பூட்டி வைத்துவிட்டு சாதாரண உடையில் எங்கள் செல்வி எப்போதும் நடமாடினாள்.

வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு, வீட்டுத் தோட்டத்தில் பொழுதைப் போக்கிக் கொண்டு ஒரு துறவியைப்போல இவள் வாழ்ந்தாளே, அதற்கு என்ன காரணம்?

ஏழு சகோதரர் தங்கள் ஒரே தங்கையின் எதிர்கால வாழ்வைச்சிறப்பிக்க காத்திருந்தபோது, அவற்றைப் பற்றிக்

கொஞ்சமும் யோசியாது, ஒரு கணநேர முடிவில் தன் உயிரை மாய்த்துக் கொண்டது ஏன்?

இந்து சமயத்தில் மரணம் பற்றி தத்துவ விளக்கங்கள் நிறைய உள்ளன. ஒவ்வொரு உயிரும் பல்வேறு பிறவி எடுத்துத் துன்பங்களை அனுபவித்துத் தன் பாவங்களை (கர்மா) கழுவிக் கொண்டதும் பரி சுத்தமாகி இறைவனுடன் இரண்டறக் கலக்கின்றது. அப்படியானால் இறைவனிடமிருந்து பிரிந்த உயிருக்கு கர்மா சேர்ந்தது எப்படி? (ஒரு பேச்சுக்குத்தான்)

இவ்வுலகில் நல்லவர்கள் துன்பம் அனுபவிப்பதும் தீயவர்கள் நன்மை அனுபவிப்பதும், அவர்களுடைய முற்பிறப்புக்களின் கர்மாக்களினால்தான். அப்டியானால் முற்பிறப்பில் நன்மை செய்த உயிர்கள் பரிணாம வளர்ச்சியடைந்து மேலே செல்லாமல் இப்பிறவியில் தீமைகளைச் செய்து மேலும் பாவங்களைச் சேர்ப்பது ஏன்? (இதுவும் ஒரு பேச்சுக்காகத்தான்)

முற்பிறப்பில் ஒருவன் என்ன தீமையைச் செய்தானோ அது இப்பிறப்பில் அவனுக்கு ஏற்படும் Every action has a reaction, equal and commensurate with the action) ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் (கோவலனுக்கு ஏற்பட்ட அவலச்சாவு).

ஒருவன் தன்னுடைய கர்மாவை அனுபவித்தே தீரவேண்டும். வேறு மார்க்கமில்லை. தியானம் செய்து இறைவனுடன் இரண்டறக் கலப்பதன் மூலம் மட்டுமே கர்மாவை அழிக்கலாம்.

ஞானிகளும், யோகிகளும், எவ்வளவு அற்புதங்களைச் செய்தாலும், முற்பிறப்பில் எஞ்சியுள்ள கர்மாவை இப்பிறப்பில் அழிப்பதற்காகவே, கடைசிக் காலத்தில் பெரும் துன்பங்களை அனுபவித்துப் பின் சமாதியடைகிறார்கள். கிருஷ்ண பரமாத்மா கடைசிக் காலத்தில் ஒரு வேடன் கையால் மரணத்தை தழுவியதும் இதனால்தான்.

இதையெல்லாம் படித்திருந்தும், இராம கிருஷ்ண மிஷன் சுவாமிகள், காயத்திரி சுலாமிகள் முதலியோர் சொல்லக் கேட்டிருந்தும் மனம் துயரம் தாங்க முடியாமல் தவிக்கிறதே! 28 வருடங்களாக தாயின் சிறகுக்குள்ளே வளர்ந்த ஒரு குஞ்சு, கண நேரத்தில் தாயுடன் முரண்பட்டு, தன் உயிரை மாய்த்துக் கொண்டது ஏன்? வாழ் நாள் முழுக்க இறைவன் விட்ட வழி என்று வாழ்ந்து வந்த எங்களிடமிருந்து இந்த அற்புதமான கிளிக்குஞ்சை இறைவன் பறித்துக் கொண்டது ஏன்?

ஆயிரத்தில் ஒருத்தியாக உலகம் அறிந்திடாத புதமையாக எங்களுக்குக் கிடைத்த இந்த அற்புத செல்வியை இறைவன் எடுத்துக் கொண்டது ஏன்?

அவளது மங்கல வாழ்வைக் காண கொடுத்து வைக்காத பாவிகளாக எங்களை இறைவன் ஆக்கியது ஏன்?

விதி எனறும் கர்மா என்றும் பல விளக்கங்களைச் சொல்லலாம். ஆனால் அவை எல்லாம் எங்கள் சோகத்தின் முன் அர்த்தமற்ற கூற்றுக்களாகவே ஆகிவிடுகின்றன.

இதோ நீட்டி நிமிர்ந்து படுக்கும் எங்கள் செல்வியின் பெட்டியை மூடப் போகிறார்கள். அத்துடன் அந்த அழகிய உருவம், இந்த வீட்டில் தெய்வமாக நடமாடிய அந்தத் தேவதை இந்த வீட்டிலிருந்து மறைந்துபோவாள்.

செல்வி எங்களை விட்டுப் பிரிந்த திதி விசேஷமானது ஆனிமாத வளர்பிறை அட்டமி. அது ஆனி உத்தரம். இத்திதியில் இறப்பவர்கள் நேரே இறைவனிடம் செல்வார்கள் என்று கூறப்படு கின்றது. எனவே எங்கள் செல்வி தெய்வமாகிவிட்டாள் எனலாம்.

# கவிதாஞ்சலி

## சின்னஞ்சிறு கிளியே செல்வக்களஞ்சியமே!

(அருள்)

சிட்டுக்குருவியைப் போல் சின்னச்சிறகடித்து
சுற்றிவர நீ நினைத்தாய்
கட்டுக் காவல்கள் விட்டுக் கழன்றொரு
காற்றாய் வரத்துணிந்தாய்
பட்டுத் தளிருடல் பற்றி யெரிகையில்
பாசமே என்ன நினைத்தாய்?
விட்டுப் பிரிந்து நாம் வேதனையில் அழ
விண்ணுலகேன் புகந்தாய்?

உன்கண்ணில் நீர் வழிந்தால் எம் நெஞ்சில்
உதிரம் கொட்டுமம்மா
உன்னுடல் தானெரிந்தால் எங்களின்
உயிரே உருகுதம்மா
பொன்னுடல் தீய்ந்ததனால் எங்கள்
புலன்களும் பொசுங்கிற்றம்மா
மின்னலாய் மறைந்தாய் அம்மா
மேனியே வேகுதம்மா

## வேறு

பிறந்தநாள் கொண்டாட்டப் பட்சணம் தந்திடுவாய்
பிள்ளைகள் என்றாலே பிரியமாய்ப் பழகிடுவாய்
சிறந்தநின் பண்பையெல்லாம் சிலாகித்துச்சொல்லிடுவார்
செல்வியே எங்களுக்கு நீ ஒரு தெய்வமம்மா!
பறந்துதான் போனதென்ன பாவிநாம் என்ன செய்தோம்
பாசமே உன்னுடைய பால்முகம் மறந்திடுமோ?
மறந்துதான் போவோமோ மலரே நின் புன்னகையை
மறுபடியும் இங்குவந்து வாழுவாய் எம்தாயே!
செல்வியெனும் பெயருடனேசெல்லமாய் வளர்ந்ததங்கை
செல்வதைப் பார்த்து நாங்கள் செய்வதறியா நிற்கின்றோம்
வல்வினை சூழ்ந்ததனால் வாழ்வினைச்சுவைக்கவில்லை
வக்கிரம் கொண்ட காலன் வாழ்வையே பறித்துவிட்டான்
சொல்லிடவார்த்தையில்லை சோகத்திற்கெல்லையில்லை
சுதந்திரக்கிளியே தெய்வம் துணைசெய்ய வரவுமில்லை
மெல்லுடல் மண்ணுக்கீர்ந்து மேலேநீ சென்றுவிட்டாய்
மல்லிகைப்பெண்ணேஉன்னை மறக்கவே முடியாதம்மா!

# தெய்வமாகிப்போன திருநிறைச் செல்வி

(அன்பு மணி)

எத்தனை கனவுகளைச் சுமந்து நின்றோம்
அத்தனை கனவுகளும்
காற்றோடு போய்விட்டனவே அம்மா
இந்தச் சின்ன வயதில்
எத்தனை பண்புகளை வெளிக்காட்டினாய்
எவ்வித ஆசையும் இல்லாமல்
ஒரு துறவிபோல் வாழ்ந்தாயே அம்மா
வீட்டுக்கு வெளியே சென்றதில்லை
வெளி உலகை நீ அறிந்ததில்லை – ஆனால்
கல்வி கலைகளில் கலங்கரை விளக்கானாய்
உன் குஞ்சுக் கையால்
உன் தங்கக் கையால்
வீட்டு வேலைகள் அனைத்தையும்
செய்தாயே அம்மா
உன் அம்மா தன் சிறகுக்குள்
உன்னை என்நேரமும் வைத்திருந்தார்
உன் மேனியில் ஒரு துரும்பு பட்டாலும்
தாங்க மாட்டாரே அம்மா
இந்த அவலச்சாவை எப்படித்தாங்குவார்?
உனக்கு என்ன குறை வைத்தோம்
ஏழு அண்ணன் தம்பிமார்
உன்னைத் தலைமேல் வைத்திருந்தார்கள்
உன் மங்கல வாழ்வைக் காணக்
காத்திருந்தார்கள் அத்தனையும்
பொய்யாய் கனவாய்ப் போனதே அம்மா
எப்படித் தாங்குவோம் இத்துயரை?
எப்படி மறப்போம் இச் சோகத்தை?
என் செல்வமே நீ ஒருத்தி தானே
இந்த வீட்டின் ஒரே செல்வம்
இந்தச் செல்வத்தை இழந்தபின்
இனி ஏது எங்களுக்கு வாழ்வு
எங்களுக்குத் தெரியும்
எங்களை விட்டு நீ போகமாட்டாய்
எந்த வடிவிலாவது எங்களோடு
இருந்து விடு அம்மா! எங்களோடு இருந்து விடு!

## அன்புச் செல்விக்கு ஐயாவின் அஞ்சலி!

(மூனாக்கானா)

உலகமெனும் மேடையிலே
உயிருடலில் நின்றாடி
பலவேடம் தாங்கிவிட்டு
பறப்பதுதான் வாழ்வாகும்.

இருந்தாலும் உன்பிரிவுச்
செய்தியதை செவிகேட்டு
வருந்தியதை கண்பார்த்து
மல்கியதே கண்ணீரை

அன்புமணி தம்பதியின்
ஆணேழு பேர்களுடன்
இன்பமகள் நீயொருத்தி
என்றிருந்தோம் ஏன்பிரிந்தாய்?

பூத்தமலர் உடன்வாடும்
புதுமை கண்டேன் உன்வாழ்வில்
உன்னுடைய அப்பாவை
உன்வீட்டில் நான்காண

வந்துவிட்டால் நீயெழுந்து
வாங்கையா என்றுசொல்லி
பூப்போன்ற உன்முகத்தில்
புன்னகையை மலரவிட்டு

வரவேற்கும் உன்மழலை
வார்த்தையினைக் கேட்பதெப்போ?
மொட்டு மலராகி
மணம்பரப்பும் பருவத்தை

தொட்டுநின்ற வேளையிலே
துயரமதைத் தந்தவிட்டு
பட்டுஉடல் கூடுவிட்டு
பறந்துவிட்ட தேனம்மா?

## ஆத்ம சாந்தி அஞ்சலி

### தாமரைச் செல்வி

அழகு தேவதையே! – உன்னுடன்
பழகிய நாட்களுக்கு
ஆயுள் குறைந்ததேனம்மா?
அன்புமணி தம்பதிக்கு - இறைவனின்
அன்புப் பரிசாய் ஒரேயொரு
பெண் வாரிசாய்ப் பிறந்தவளே!
உருவத்தில் குமரியாய்
உள்ளத்தில் குழந்தையாய்
தெய்வீகம் தவழுமுன்
திருமுகத்தைத் தினம்
ஒருமுறை பார்த்தாலே போதும்
தீராத கவலைகளெல்லாம்
தீர்ந்து விடுமம்மா.
உன்னழகில் மயங்காதோர் எவருண்டு.
உன்னறிவில் வியக்காதோர் எவருண்டு
தங்கக் கூண்டுக்கிளியே!
எங்களிடம் இயலாக் குழந்தையாய்
வைத்தியசாலையில் நீயிருந்தாய் - உன்னுள்
தைத்துக்கொண்டிருந்த வேதனைகளை
உனக்குள்ளே
புதைத்துக்கொண்டு எங்களுக்காக
வேதனைப்பட்டாய்.
உன்;
சின்னச் சின்ன ஆசைகளுக்கெல்லாம் - நாங்கள்
சிறகுகள் தரக்காத்திருந்த வேளையில்
தீ வந்து பொசுக்கியதென்ன?
நீ எட்டாவுயரத்தில் சிறகில்லாமலே
எம்மைவிட்டு பறந்ததென்ன? – உன்னைக்
கொத்துக்குள் வைத்த மாங்கனியாய்ப்
பொத்திப் பொத்தி வளர்த்துவிட்டு
காலனவன் கையில் கொடுத்த கொடுமையை
நாளெல்லாம் நினைத்துத் தவிப்பது

உனக்குக் கேட்கவில்லையா?
தேடக்கிடைக்காத முத்தே – உன்னைத்
தொலைத்துவிட்டு உன் சிப்பிகள்
புலம்புவது கேட்கவில்லையா?
எங்கே கேட்போமம்மா - இனியுன்
கிளிமொழியை
எங்கே காண்போமம்மா - இனியுன்
திருவுருவை.
கருவறை தந்தசுகம் போதுமென்று – நீ
கல்லறை தேடினாயோ?
உயிரோவியமே! – எங்கள்
உயிருடனுயிராய் கலந்தவளே! – நீ
சென்று மறைந்த இக்கணங்களில்
கனன்று உழலும் எங்களிதய விம்மல்கள்
மேலும் அதிகரித்துக்கொண்டேயிருக்குதம்மா!
யாரென்ன ஆறதல் சொன்னாலும் - மனம்
போர்க்கொடி உயர்த்துகிறது ஆறதலடையாமல்
நீயாகவே கேட்டு – உன்
ஆத்ம சாந்திக்காக
"ஆனந்தமய பகவன்...." பாடினோம் - இன்று
கவிதை புனைகிறோம் - நீ
மரணித்த பின்பும்
மரணிக்காத உன் நினைவுகள்
மயிலிறகாய் எமை வருட – எங்களிதயத்தில்
உயிருடனின்னும் நீ வாழ்கிறாயம்மா.

**"தவபதி" குடும்பத்தினர்**

## எங்கள் செல்வி

### மாறன் - ஜேர்மனி

நாட்கள் நாற்பது சென்றபோதும் - எம்
நாவைவிட்டு அகன்றிடாதுன் பெயர்
எம் மாமிக்கு ஒரே மகள், திருநிறைச்செல்வி
சகல திருவும் நிறைந்ததனால், திருநிறைச்செல்வி
பெண்குழந்தை இல்லை என்ற பெற்றோர் குறைதீர்த்து
பெண் தெய்வமாய் இங்கு பிறந்தவளே!
உன்னை நாம் பார்க்காமல் விட்டாலும்
பதித்துள்ளோம் எம்நெஞ்சில் உன்னுருவை
எங்கள் உறவு விருட்சத்தின் வேரொன்று அறுந்தது
உறவுகளை ஒன்றிணைக்க
உயிர்த்தியாகம் செய்தாயோ?
அமைதியாகத் தூங்கும் எம்செல்வமே!
உன் அமைதிக்காக எம் அமைதி குலைத்தது ஏன்?
(இன்ரநெற் மூலம் அனுப்பிய கவிதை)

## கருகிய மலர்

### மாறன் - ஜேர்மனி

சற்றுக் கருகியும்
சத்தமிடுமளவு உயிர்பிழைத்தாய்
ஆனந்தம்! ஆனந்தம்!!
உள்ளத்தால் உனைத்தொழுதோம் - எம்
உயிர் தந்தாய் நன்றியென்று
இவர்க்குச் செய்யச் சேவையொன்று
இப்பிறப்பில் மீதியுண்டோ?
இறையுனைப் பணிந்தோம்
இன்று எம் கண்ணீரின் கேள்விக்கு
கதை கதையாய் காரணமா?
இறையுண்டோ இவ்வுலகில் இரக்கமற்ற காலன் நீ
கருணையெனும் கருத்து கடவுள் உனக்குமுண்டோ?
இது ஓர்
இறுகிப்போன இதயத்தின்
இரத்தக்கண்ணீர்.

## செல்வியே நீ தெய்வமானாய்!

(ரவிச்சித்தா)

மோனத் தவம் புரியும்
ஞானத்துறவியுனைக்
காணத்தவம் கிடந்தோம்
கண்டதோ சோகமம்மா

வாழும் வயதினிலே
வாழ்வை முடித்தது ஏன்?
வசந்தம் வருகையிலே
வானகம் சென்றதும் ஏன்?

சீரும் சிறப்பும் உனைச்
சேரும் காலமொன்று
கூடிவருகையில் நீ
குழப்பியதும் ஏனம்மா

ஊரும் உறவும் உனை
உயர்த்தும் கால மொன்றை
உணராமல் கொள்ளாமல்
ஒதுங்கியே போனாயே

பாழும் உலகினிலே
போலி மனிதருடன்
சோலி எதற்கு எனச்
சுதந்திரம் பெற்றாயோ?

வாழும் வாழ்வு வெறும்
மாயையென உணர்ந்து
சூழும்தளை நீக்கி
சொர்க்கம் புகுந்தாயோ?

வேரும் அழுகிறது
விழுதும் அழுகிறது
விருட்சமே விழுகிறதே
வேல்விழியே நீ அறிவாயா?

சித்தா உனக்காகச்
செய்ய எண்ணியவை
சொல்லில் அடங்காது
சோகம் மாளாது

சித்தியும் என்கூடச்
சேர்ந்து அழுகிறாள்
செல்வமே என்ன செய்வோம்
செல்வியே தாங்கமாட்டோம்
வைத்திய சாலையிலே
வந்துனைப் பார்த்துவிட்டு
பைத்தியமாகி விட்டோம்
பைங்கிளி போதுமம்மா

செல்வங்கள் உன்னோடு
சேர்ந்து விளையாடத்
தீராத ஆசைகொண்டார்
செல்வமே மறந்தாயோ?

உற்றார் உறவினரும்
உன்ஊரைச் சேர்ந்தவரும்
விம்மி அழுகிறார்
வேதனையோ பெரிதம்மா!

காணக் கிடைக்காத
கற்பூரப் பெட்டகமே!
கந்தையாய்ப் போனாயே
கண்களே குளமம்மா!

தெய்வக் குழந்தையே நீ!
செல்வி என வாழ்ந்தாய்
தெய்வம் அழைத்தவுடன்
தெய்வமாய்ப் போனாயோ?

# எங்கள் செல்வி

## ஆரையூர் இளவல் - (அம்மாச்சி)

எங்கள் செல்வி திருநிறைச் செல்வி!
திருவும் கல்வியும் சீரும் நிறைந்தவள்
எங்கள் சிந்தை எனும் தீவில் தித்திக்கும்
அமிர்தமாய் அமர்ந்தவள்
பார்வதி அகத்துதித்த பால் நிலா!
பாசமும் நேசமும் காட்டிய பரிமளசுகந்தம் அவள்
அன்பினால் எமையெல்லாம்
அரவணைக்க வந்தவள் - தூய
பண்பினால் எமதுயிர் கவர்ந்தவள்
பெற்றோரின் பெருநிதியமாய்
சுற்றத்தாரின் சுந்தர ராணியாய்
எங்கள் குலவிளக்காய் குளிர் நிலவாய்
குன்றின் மேல் ஒளிச்சுடராய்
எம்முள்ள மெல்லாம் என்றென்றும்
நிறைந்திருக்கும் திருநிறைச் செல்வி!
பெற்றோரின் பெருந்தவத்தால் வந்த தங்கரதம் அவள்!
கண்ணூறு பட்டுவிடுமே என்றஞ்சித் தாய்
கண்மணியைக் கண்ணிமைபோல் காத்து வந்தாள்
பள்ளிப்பருவத்தே பாவாடை அணிந்து இல்லம்வருவாள்
ராதாவும் தீபாவும் சேர்வார்கள்
பரதம் ஆடி மகிழ்வார்கள் - அவள்
தங்கக் கால்களில் கொலுவிருக்கும்
சலங்கைகள் கொஞ்சிக் கொஞ்சி
ஒலி இசைக்கும் அந்த இனிய நினைவுகள்
எம் நெஞ்சில் இனிக்கிறது என்றும்!
செல்வி ... செல்வி ... என ஓடி வந்து
அள்ளி அணைத்து முத்தமழை பொழிவார்கள்
அவள் மாமியும் பாட்டியும் (அப்பம்மா)
செல்வி என்றால் எங்களுக்கெல்லாம் பெரும் செல்வம்
அவளுக்கு நாங்கள் செல்வம்
அம்மம்மா மடிமீதமர்ந்து அக்காவுக்கும் (தாய்)
பெரியம்மாவுக்கும் அண்ணன்மாருக்கும் தம்பியர்க்கும்
அம்மாச்சிமாருக்கும் தன் தங்கக் கையினால்

அப்படிக் கொடுப்பதற்கு கொள்ளை ஆசை அவளுக்கு
அன்று அருளுக்கும் பிறந்த நாள்
எவருக்கும் அது நினைவில்லை
சமையல் பாடத்தில் படித்ததை பரீட்சித்துப்
பார்த்தாள் செல்வி!
விதம்விதமான பலகாரங்கள் செய்து
அண்ணாவின் பிறந்தநாள் பரிசாக
அயல்வீடு சென்று வழங்கினாள்.
இதெல்லாம் எப்படி? ஆட்களைக் கண்டால் ஓடிஒளிந்து
மேகத்துள் முகம் மறைவிக்கும்
முழுமதியாய் வீட்டில் இருந்தவள் இதெல்லாம் எப்படி?
தந்தையின் (அன்புமணி)
நூலகம் செல்வியின் அறிவகம்!
பிறவியின் நோக்கம் வாழ்வியல், இறையியல்,
தத்துவம், சங்கார்ப்பம், சமர்ப்பணம் இவையெல்லாம்
செல்விக்கு அத்துப்படி.
செல்வி – அவள் ஒரு பல்கலைக்கழகம்!
ஆனால் ஓர் அதிசயம்
இந்தப் பிஞ்சு வயதிலே பேரின்பப் பெருவாழ்வை
நாடியது அவள் உள்ளம்.
ஏழு அண்ணன் தம்பியருக்கு ஒரு பெண் சகோதரியாக
சீரும் சிறப்பும்மிக்க குடும்பத்தில்
பிறந்து வளர்ந்த செல்வி
பொன் வேண்டேன் பொருள் வேண்டேன்
பட்டாடை வேண்டேன் எனத்துறவியாய் இறையருள்
ஒன்றே வேண்டி நின்றாள்!
‘ஆஸ்பத்திரியிலே ஆறு நாட்கள் ஆனந்தமய பகவன்
ஹே ப்ரேமமய பகவன்’ – என்ற
அந்தத் தெய்வீக கானத்தைப் பாடச்சொல்லிக்
கேட்டுக்கொண்டே மெய் மறந்திருந்தாள்!
செல்விக்கு உடலில் வாதையில்லை
சிரித்தாள், கதைத்தாள், பார்வையாளர்களின்
குசலம் விசாரித்தாள்
இறையருள் அவள் பக்கம் துணையாயிருந்தது.
25ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆனி உத்தர தரிசன புனித நன்நாள்
உலகில் வாழும் இந்துப் பெருமக்கள் இறைவனை
ஜோதி வடிவில் தரிசனம் செய்யும் நன்நாள்!
அன்று
செல்வியின் உயிர் ஜோதி அருட்பெரும் ஜோதியுடன்
கலந்ததுவே!
இது செல்வி செய்ததவம்; ஆனாலும்
இந்தப் பெரும்பிரிவை எம்மால் தாங்கமுடியவில்லையே!
அவள் நினைவால் வாடுகின்றோம்!
நெஞ்சம் வெடிக்க விம்முகின்றோம்!
இறைவா!
இது என்ன சோதனை?
செல்வியின் –
எங்கள் செல்வியின் வாழ்வில் இறுதியும்
ஞானசம்பந்தப் பெருமானின்
இறுதி வார்த்தையால்
தேற்றிக் கொள்கிறோம் எம்மை
என்றென்றும் எங்கள் செல்வி
உன் திருப்பாத கமலங்களில்
பேரின்பப் பெருவாழ்வு
வாழ்ந்திருக்க அருள்வாயாக!

## பகவத்கீதை வெண்பா

கந்தைத் துணியைக் களைந்தே புத்தாடை ஒரு
மைந்தன் உடுக்கும் வகைபோல - இந்த உயிர்
நைந்த உடல் நீந்து நண்ணும் புதுவுடல்கள்
முந்தவந்தடையும் முனைந்து

(புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை)

# நன்றி

எங்கள் செல்வி மட்/போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது தினமும் வருகைதந்து, ஆறுதல் கூறிய அன்பர்கள், மரணச் சடங்கு ஏற்பாடுகளில் கலந்து கொண்டு உதவிய வர்கள், நேரிலும் அஞ்சல் மூலமும் ஆறுதல் வார்த் தைகள் கூறியவர்கள், 41ம் நாள் கிரியைகளில் உதவியவர்கள், சாந்தி செய்த பரமநயினார் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ காந்தநாதக் குருக்கள், முதலிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"பார்வதியகம்" - குடும்பத்தினர் -

ஆரையம்பதி,

05.08.2004

இந்நூலை மின்கணனியில் அச்சமைத்த
மட். வளிமண்டல ஆராய்ச்சி அலுவலக
உதவிப் பணிப்பாளர்
க. சூரியகுமாரன் அவர்களுக்கு
எங்கள் விசேட நன்றி!

Divisional Secretary
Divisional Secretariat
Manmunai Pattu
Arayampathy.




எவர்கிறீன் அச்சகம் - 93, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ : 065-22607